**முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு**

**O.S.No.23/2014**

**தேதி : 01.12.2021**

**PW.1-குமார்**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 4 முதல் 6 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

குமாரவலசைச் சேர்ந்த கரிச்சியனகவுண்டர் மகன் கே.துளசிமணி என்பவர் என் அப்பாதான். 22.4.1996 ம் தேதியிட்ட Ex.A4 கிரைய ஒப்பந்தத்தில் என் அப்பா சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்று சொன்னால், அது எனக்கு தெரியவில்லை. நான் என் தரப்பில் 2,3 பிரதிவாதிகள் 4 ம்பிரதிவாதியோடு ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தத்தை Ex.A4 ஆக தாக்கல் செய்துள்ளேன், அந்த Ex.A4 ஐ நான் படித்துப்பார்த்துள்ளேனா என்று கேட்டால், படித்துப் பார்த்துள்ளேன். நான் Ex.A4 கிரைய ஒப்பந்தத்தை படித்துப்பார்த்து அதில் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்பதை தெரிந்து கொண்டேன் என்று சொன்னால், அது தெரியவில்லை. துளசிமணி என்பவர் என் அப்பாதான், ஆனால் என் அப்பா துளசிமணிதான் Ex.A4 கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளாரா என்பதை நான் தெரிந்துகொள்ளவில்லை.Ex.A4 கிரைய ஒப்பந்தத்தில் என் அப்பா சாட்சி கையொப்பம் போட்டது எனக்கு நன்றாக தெரியும் என்றும், ஆனால் இந்த வழக்கிற்காக அது தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. நான் தாக்கல் செய்துள்ள 9.2.1995 ம் தேதியிட்ட Ex.A1 கிரைய பத்திரத்தில் என்ன காரணத்திற்காக பூர்வீக சொத்து விற்கப்படுகிறது என்று காரணம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று கேட்டால், காரணம் எல்லாம் எழுதவில்லை. 1.3.2014 ம் தேதி நான் அனைத்து பிரதிவாதிகளிடமும் சொத்துக்களை கறார் செய்து கொள்ளலாம் என்று கேட்டேனா என்று கேட்டால், கறார் செய்து கொள்ளலாம் என்று கேட்கவில்லை. Ex.A4 சமாச்சாரமெல்லாம் எனக்கு 2013 ம் ஆண்டே தெரியவந்தது என்று சொன்னால், 2014 ம் ஆண்டுதான் தெரியவந்தது. ஆனால் நான் 2013 ம் ஆண்டே Ex.A1 மற்றும் Ex.A2 நகல்களை

பெற்றுவிட்டேன் என்று சொன்னால், 2013ம் ஆண்டு 9வது மாதம் அவற்றை பெற்றேன். 2,3 பிரதிவாதிகள் 4ம்பிரதிவாதியிடம் கடன் எதுவும் பெறவில்லை என்றும், உண்மையில் 4ம்பிரதிவாதி இந்த சொத்தை வாங்குவதற்காகத்தான் 2,3 பிரதிவாதிகளிடம் Ex.A4 கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றும், இது அனைத்தும் தெரிந்தும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால், அப்படியில்லை, 2,3 பிரதிவாதிகள் வளர்மதி பைனான்ஸ், வெள்ளோடில் ரூபாய் 10,000/- , ரூபாய் 15,000/- கடன் வாங்கியுள்ளார்கள். 4ம்பிரதிவாதி ஒரு ஆசிரியராக பணிபுரிந்து ஒய்வு பெற்றுள்ளார் என்று சொன்னால், ஆமாம். வெள்ளோடில் வளர்மதி பைனான்ஸ் எந்த கதவு எண்ணில் எந்த முகவரியில் இருந்தது என்று கேட்டால், வளர்மதி பைனான்ஸ் வெள்ளோடில் சென்னிமலை ரோட்டில் இருந்தது. அந்த வளர்மதி பைனான்ஸின் கதவு எண் எனக்கு தெரியாது என்று சொன்னால், விசாரித்துவிட்டு வருகிறேன், நான் விசாரித்து விட்டு சொல்லாமல் போகவா இருக்கிறேன். அந்த வளர்மதி பைனான்ஸில் யார் யார் பங்குதாரர்கள் என்பது எனக்கு தெரியுமா என்று கேட்டால், தெரியும். வளர்மதி பைனான்ஸின் பங்குதாரர் சம்பந்தப்பட்ட ஆவணத்தை நான் பார்த்தது இல்லை, ஆனால் யார் யார் பங்குதாரர்கள் என்று சொன்னார்கள், தெரியும். 4ம்பிரதிவாதி நடராஜன் ஆவணங்கள் அடிப்படையில் அந்த வளர்மதி பைனான்ஸில் பங்குதாரரா இல்லையா என்பது எனக்கு தெரியுமா என்று கேட்டால், ஆவணங்கள் அடிப்படையில் தெரியாது. 4ம் பிரதிவாதி வளர்மதி பைனான்ஸின் பங்குதாரர் என்று யூகத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்று சொன்னால், சரியில்லை, விசாரித்ததின் அடிப்படையில் சொல்கிறேன். 4ம்பிரதிவாதி வளர்மதி பைனான்ஸின் பங்குதாரர் இல்லை என்றும், அவருக்கும் அந்த பைனான்ஸிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், நான் விசாரித்ததில் அவர் அந்த பைனான்ஸின் பங்குதாரர் என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. 2,3 பிரதிவாதிகள் நேரில் தாவா சொத்தை 4ம்பிரதிவாதிக்கு சுவாதீனம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா, தெரியாதா என்று கேட்டால், தெரியாது. 4ம்பிரதிவாதி நீதிமன்றம் மூலம் தாவா சொத்தை கிரையம் வாங்கிக்கொண்டு, தாவா சொத்தை 2,3 பிரதிவாதிகளிடமிருந்து நேரடியாக சுவாதீனம் பெற்றார் என்றும், நான் வழக்கிற்காக 4ம் பிரதிவாதி தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்று பொய்யாக

சொல்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. தாவா சொத்து 2,3 பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்து என்றும், அதனால் தாவா சொத்தில் பாகம் கேட்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றும் சொன்னால், தாவா சொத்து அவர்களது தனிப்பட்ட சொத்து இல்லை, கூட்டுக்குடும்ப சொத்தாகும். நீதிமன்றம் தாவா சொத்தை 8.2.2001 ம் தேதியே 4 ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதி கொடுத்துவிட்டார்கள் என்றும், அதனால் அதிலிருந்து 13 ஆண்டுகள் கழித்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கது இல்லை என்று சொன்னால், சரியில்லை. நான் தாவா சொத்தின் கூட்டுசுவாதீனத்தில் இருப்பதாக நீதிமன்ற கட்டணம் செலுத்தி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், ஆனால் நான் தாவா சொத்தின் கூட்டுசுவாதீனத்தில் இல்லை என்றும் , அதனால் நான் செலுத்தி உள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்று சொன்னால், சரியில்லை, நான் தாவா சொத்தின் கூட்டுசுவாதீனத்தில் இருக்கிறேன். 2,3 பிரதிவாதிகள் தாவா சொத்து சம்பந்தமாக 4 ம்பிரதிவாதியிடம் கிரைய ஒப்பந்தம் போட்டதும், 4 ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகள் மீது வழக்கு போட்டதும், 4 ம்பிரதிவாதி நீதிமன்றம் மூலம் கிரையம் பெற்றதும் எனக்கு ஏற்கனவே தெரியும் என்றும், ஆனால் காலவரையறைக்குள் வழக்கை கொண்டு வருவதற்காக அவை 2014 ம் ஆண்டுதான் தெரியும் என்று இந்த வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. தாவா சொத்தை பொறுத்தவரை எனக்கு சட்டப்படி பங்கு இல்லை என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்று சொன்னால், சரியில்லை. 2 ம் வாதி கல்பானாவை நான் சாட்சியாக விசாரிக்கப்போகிறேனா என்று கேட்டால், விசாரிக்கிறேன்.

**<u>வாதிகள் தரப்பு மறு முதல் விசாரணை:</u>**

நானும், 2 ம் வாதி கல்பனாவும் எங்களது பூர்வீக சொத்தில் கூட்டுப்பங்குதாரர்களோடு கூட்டுசுவாதீனத்தில் இருக்கிறோமா அல்லது நாங்கள் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருக்கிறோமா என்று கேட்டால், நாங்கள் தனிப்பட்ட சுவாதீனத்தில்தான் இருக்கிறோம்.

**<u>4 முதல் 6 ம் பிரதிவாதிகள் தரப்பு மேல் குறுக்கு விசாரணை:</u>**

பூர்வீக சொத்தில் நாங்கள் தனிச்சுவாதீனத்தில் இருக்கிறோம் என்பதை காட்டுவதற்கு சிட்டா, பட்டா எங்களது தனிப்பெயரில் இருக்கிறதா என்று கேட்டால், எங்கள் தனிப்பெயரில் இல்லை. பூர்வீக சொத்தில் நாங்கள் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருக்கிறோம் என்பதற்கு எங்களது பெயரில் உட்பிரிவு ஆகியுள்ளதா என்று கேட்டால், அந்த மாதிரி ஆகவில்லை. நாங்கள் பூர்வீக சொத்தின் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருப்பதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.